தாமிரவருணி விழிப்புணர்வு பலகைகளில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் அகற்றம்

இரும்பு தடுப்பில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை அகற்றிய மாநகராட்சி ஊழியர்.

திருநெல்வேலி, ஜூன் 15: கொக்கிரகுளத்தில் தாமிரவருணி விழிப்புணர்வு பலகைகளில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை மாநகராட்சி பணியாளர்கள் திங்கள்கிழமை அகற்றினர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து மாவட்ட பொறுப்பு அமைச்சரும், நிதியமைச்சருமான மரிய வில்சன் அண்மையில் ஆய்வு செய்தார். இதற்காக திருநெல்வேலிக்கு வந்த அவரை வரவேற்று, மாநகரின் பல்வேறு இடங்களிலும் தவெகவினர் சுவரொட்டிகள் ஒட்டினர்.

கொக்கிரகுளத்தில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் எதிரே தாமிரவருணி கரையோரத்தில் மாநகராட்சி நிர்வாகத்தால் காட்சிப் படித்துறை, தடுப்பு பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த இரும்பு பலகைகளில் தமிழ் எழுத்துகளால் தாமிரவருணி நதியின் சிறப்புகள் எழுதப்பட்டுள்ளன. இந்த விழிப்புணர்வு வாசகங்கள் மாணவர்கள், பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றது.

இந்நிலையில் அந்த விழிப்புணர்வு வாசகங்களின் மேல் தவெகவினர் சுவரொட்டிகளை ஒட்டியதால் பொதுமக்களிடையே கடும் அதிருப்தி ஏற்பட்டது. அந்த சுவரொட்டிகளை மாநகராட்சிப் பணியாளர்கள் பிரத்யேக வாகனத்தின் மூலம் தண்ணீரைப் பீய்ச்சி அடித்து திங்கள்கிழமை அகற்றினர். வருங்காலங்களில் இதுபோன்று அரசு விழிப்புணர்வு பதாகைகள், சுவர்களில் சுவரொட்டி ஒட்டுவோர் மீது மாவட்ட ஆட்சியர் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இன்றைய நிகழ்ச்சிகள்

திருநெல்வேலி

அருள்மிகு செப்பறை அழகிய கூத்தர் திருக்கோயில்: ஆனித் திருவிழா, சிறப்பு வழிபாடு, ராஜவல்லிபுரம், காலை மற்றும் மாலை 6.30 மணி.

மாநகராட்சி நிர்வாகம்: பொது மக்கள் குறைதீர் முகாம், மாநகராட்சி அலுவலகம், திருநெல்வேலி நகரம், காலை 10.30 மணி.

புனித அந்தோணியார் ஆலயம்: ஆண்டுப் பெருவிழா, 25-ஆவது ஆண்டு ஆலய அர்ச்சிப்பு விழா, புனித அந்தோணியார் சப்பர பவனி, திருப்பலி, சேவியர் காலனி, மாலை 6.30 மணி.

முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு தின விழிப்புணர்வு கையொப்ப இயக்கம்

ஆட்சியர் ஆனந்த் மோகன் தொடங்கிவைத்தார்

திருநெல்வேலி, ஜூன் 15: முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, சமூக நலத்துறை சார்பில் விழிப்புணர்வு கையொப்ப இயக்கத்தை மாவட்ட ஆட்சியர் ஆனந்த் மோகன் திங்கள்கிழமை தொடங்கி வைத்தார்.

முதியோர்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் அநீதிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அவர்களின் உரிமைகளை பாதுகாக்கவும் ஆண்டுதோறும் ஜூன் 15-ஆம் தேதி உலக அளவில் முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு தினம் அனுசரிக்கப்படுகிறது.

இதையொட்டி, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற இந்நிகழ்வில், கையொப்ப இயக்கத்தை தொடர்ந்து ஆட்சியர் தலைமையில் அரசு அலுவலர்கள் விழிப்புணர்வு உறுதிமொழியும் ஏற்றனர்.

பின்னர், முதியோரை பேணுவோம் என்ற தலைப்பில் அரசுப் பள்ளிகளில் மாணவ, மாணவியர்களுக்கு நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதலிடம் பிடித்த மீனாட்சிபுரம் நகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளி 12-ஆம் வகுப்பு மாணவி சு.காந்திமதி, பேச்சுப்போட்டியில் முதலிடம் பிடித்த மதிதாஇந்துக்கல்லூரி மேல்நிலைப்பள்ளி 11-ஆம் வகுப்பு மாணவி ம.வான்மதி, ஓவியப்போட்டியில் முதலிடம் பிடித்த கல்லணை மாநகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 11-ஆம் வகுப்பு மாணவி சி.காவ்யா, புகைப்படப்போட்டியில் முதலிடம் பிடித்த சூரங்குடி கிறிஸ்டோபர் கலை மற்றும் அறிவியல் பெண்கள் கல்லூரி இரண்டாம் ஆண்டு கணினி அறிவியல் பிரிவு மாணவி சு.நாகபூரணி ஆகியோருக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் பரிசுகளை ஆட்சியர் வழங்கினார்.

முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு வரும் 30-ஆம் தேதி வரை பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு முதியோர்களை மதிப்பது குறித்தும், முதியோர்கள் குறித்த புரிதலை ஏற்படுத்துவதற்கும், அவர்களை நல்ல முறையில் நடத்துவது குறித்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் மு.துரை, மாவட்ட சமூக நல அலுவலர் தாஜூன்னிசா பேகம், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) ஜெயா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

விழிப்புணர்வு கையொப்ப இயக்கத்தை தொடங்கி வைக்கிறார் மாவட்ட ஆட்சியர் ஆனந்த் மோகன்.

மாணவர்களுக்கு உதவி...

திருநெல்வேலி கே.டி.சி. நகரில் நடைபெற்ற மாற்றுக்கட்சியினர் தவெகவில் இணையும் விழாவில் மாணவர்களுக்கு நலஉதவி வழங்கும் பணியை தொடங்கி வைத்தார் தவெக திருநெல்வேலி தெற்கு மாவட்டச் செயலர் ராஜகோபால். உடன், வடக்கு மாவட்ட இணைச் செயலர் அ.மரியஜாண், வழக்குரைஞர் அன்பு அங்கப்பன்.

சமூக வலைதளத்தில் சர்ச்சைக்குரிய பதிவு: இளைஞர் கைது

திருநெல்வேலி, ஜூன் 15: திருநெல்வேலியில் மோதலைத் தூண்டும் வகையில் சமூகவலைதளத்தில் ஆயுதங்களுடன் சர்ச்சைக்குரிய பதிவை வெளியிட்டதாக இளைஞரை போலீஸார் கைது செய்தனர்.

சமூகவலைதள செயலியில் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் குறித்து கடந்த 13 ஆம் தேதி தாழையூத்து போலீஸார் கண்காணிப்பு மேற்கொண்டனர். அப்போது அம்பாசமுத்திரம், செட்டிமேடு பகுதியைச் சேர்ந்த சேவியர் ரீகஸ்(20) என்பவர் தனது சமூக வலைதள செயலியில், ஆயுதங்களுடன் இரு தரப்பினரிடையே வன்முறையை தூண்டும் வகையிலான வாசகத்தை பகிர்ந்தது தெரியவந்ததாம். இதுதொடர்பாக, போலீஸார் வழக்குப்பதிந்து அவரை திங்கள்கிழமை கைது செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

புகைப்படத்தை வைத்து பெண்ணை மிரட்டியவர் கைது

திருநெல்வேலி, ஜூன் 15: திருநெல்வேலி அருகே பெண்ணின் புகைப்படத்தை அவரது அனுமதியின்றி பகிர்வதாக மிரட்டிய நபரை போலீஸார் கைது செய்தனர்.

திருநெல்வேலி மாவட்டம் நான்குனேரி பெருமாள் நகரைச் சேர்ந்தவர் சுபாஷ் (47). தொழிலாளி. இவர் திருநெல்வேலியைச் சேர்ந்த பெண் ஒருவருடன் பழகி வந்தாராம். இந்நிலையில் அந்தப் பெண்ணின் புகைப்படத்தை அவரது அனுமதியின்றி பிறருக்கு சமூக வலைதள செயலி மூலம் பகிர்வதாக சுபாஷ் மிரட்டியதாகக் கூறப்படுகிறது. இதுகுறித்து அந்தப் பெண் முன்னீர்பள்ளம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீஸார் வழக்குப் பதிவு செய்து சுபாஷை ஞாயிற்றுக்கிழமை கைது செய்தனர்.

தாமிரபரணி இலக்கிய மாமன்ற கூட்டம்

திருநெல்வேலி, ஜூன் 15: திருநெல்வேலி நகரம் திருவள்ளுவர் கூட்ட அரங்கில், தாமிரபரணி இலக்கிய மாமன்றத்தின் 209 ஆவது கூட்டம் நடைபெற்றது.

புலவர் கந்தகுமார் தலைமை வகித்தார். பாடகர்கள் கனி, மயில், மீனாட்சிநாதன் ஆகியோர் இறைவணக்கமும், தமிழ்த்தாய் வாழ்த்தும் பாடினர். பாரதிதாசன் பண்பாட்டுக் கழக தலைவர் கவிஞர் பாப்பாக்குடி இரா.செல்வமணி வரவேற்றார்.

சமீபத்தில் வெளியிடப்பட்ட கவிஞர் ஜெயபாலன் எழுதிய 'வெளியில் இல்லை' தன்னம்பிக்கை நூலை பேராசிரியர் சிவராமச்சந்திரன், கவிஞர் சக்தி வேலாயுதம், காந்திமதி வேலன் ஆகியோர் திறனாய்வு செய்தனர். நூலாசிரியர் ஜெயபாலன் ஏற்புரை வழங்கினார்.

கூட்டத்தில் பொருநை இலக்கிய வட்டப் புரவலர் தளவாய்நாதன், கோதை மாறன், ரவிச்சந்திரன், ராமலிங்கம், மருத்துவக் கல்லூரி மாணிக்கவாசகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நூலாசிரியருக்கும் திறனாய்வாளர்களுக்கும் நினைவுப் பரிசாக புத்தகங்கள் வழங்கப்பட்டன. காயல் அருள் நன்றி கூறினார்.

அமைப்பின் தலைவர் கவிஞர் பாமணி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். ஏற்பாடுகளை முத்துராஜ், சீனிவாசன், ஆறுமுக நயினார் ஆகியோர் செய்திருந்தனர்.

துணை மேயர் ஆய்வு...

திருநெல்வேலி மாநகராட்சியின் 1 ஆவது வார்டுக்குள்பட்ட தச்சநல்லூர் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் திங்கள்கிழமை ஆய்வு செய்தார் துணை மேயர் கே.ஆர்.ராஜூ.

இந்து முன்னணி பொதுக்குழு கூட்டம்: பந்தல்கால் நடும் விழா

பாளையங்கோட்டையில் இந்து முன்னணி சார்பில் திங்கள்கிழமை நடைபெற்ற பந்தல்கால் நடும் விழாவில் பங்கேற்றோர்.

திருநெல்வேலி, ஜூன் 15: இந்து முன்னணியின் மாநில பொதுக்குழு கூட்டம், பாளையங்கோட்டையில் இம்மாதம் 21 ஆம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான பந்தல்கால் நடும் விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

இந்து முன்னணி மாநில துணைத் தலைவர் வி.பி.ஜெயக்குமார் தலைமை வகித்தார். மாநில இணை அமைப்பாளர் பொன்னையா, மாநில துணைத் தலைவர் அரசுராஜா, மாநில செயலர் கா. குற்றாலநாதன், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் சக்திவேலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொழிலதிபர் ராதாகிருஷ்ணன் பந்தல்கால் நடும் வைபவத்தை தொடங்கி வைத்தார். திருநெல்வேலி கோட்ட செயலர்கள் க.பிரம்மநாயகம், ஆறுமுகசாமி, மாநகர் மாவட்ட செயலர்கள் சங்கர், விமல், செந்தில்குமார் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

முன்னதாக பந்தல்கால் நடும் விழாவிற்கு அனுமதி பெறாததால் நடத்தக் கூடாது என காவல் துறையினர் தெரிவித்தனர். இருப்பினும் பொதுக்குழு கூட்டத்திற்கு முறையாக அனுமதி பெறப்பட உள்ளது; பந்தல்கால் நிகழ்ச்சிக்கு தேவையில்லைஎனக் கூறி இந்து முன்னணியினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து நடைபெற்ற பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது.

மக்கள்தொகை கணக்கெடுப்பு: களப்பணியாளர்களுக்கு பயிற்சி

திருநெல்வேலி, ஜூன் 15: மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027-க்கான முதல்கட்ட கணக்கெடுப்பு, தமிழகத்தில் வரும் ஆகஸ்ட் 1 முதல் ஆகஸ்ட் 30 வரை நடைபெறவுள்ளது. இந்தப் பணிக்கான களப்பணியாளர்களுக்கு மாவட்ட அளவிலான பயிற்சி ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை தொடங்கியது.

தொடர்ந்து 3 நாள்கள் பயிற்சி நடைபெறுகிறது. இந்தப் பயிற்சியை மாவட்ட வருவாய் அலுவலர் மு.துரை தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் அனிதா (பொது), சுப்பிரமணியன் (தேர்தல்) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

1872-ஆம் ஆண்டு இந்தியாவில் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெற்றது. தற்போது 16-ஆவது மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெறவுள்ளது. இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு நடைபெறும் 8ஆவது கணக்கெடுப்பாகும். மேலும், முதல் டிஜிட்டல் கணக்கெடுப்பு என்பதால் கணக்கெடுப்பு மேற்கொள்ளவரும் கணக்கெடுப்பாளர்களுக்கு மக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என மாவட்ட வருவாய் அலுவலர் கேட்டுக்கொண்டார்.

சென்னையில் உள்ள மக்கள் தொகை இயக்குநரகத்தின் இணை இயக்குநர் சின்னத்துரை, உதவி இயக்குநரும் மாஸ்டர் பயிற்சியாளருமான சரிதா ஜலால், புள்ளியியல் புலனாய்வாளர் அபிஷா சந்தோஷ், வட்டார புள்ளியியல் ஆய்வாளர் ராஜலெட்சுமி ஆகியோர் பயிற்சியளித்தனர்.

மக்கள் தொகை கணக்கெடுப்பாளர்கள் ஒவ்வொருவரும் தங்களது கைப்பேசியில் மக்கள் தொகை கணக்கெடுப்புக்காக உருவாக்கப்பட்ட பிரத்யேக செயலியில் விவரங்களை சேகரிக்க உள்ளனர். முதல் கட்டமாக வீடுகள் பற்றிய நிலைமை, குடும்பத் தலைவர் பற்றிய விவரங்கள், குடும்பத்தில் உள்ள நபர்களின் எண்ணிக்கை, அக்குடும்பத்திற்குகிடைக்கக்கூடிய அடிப்படை மற்றும் அத்தியாவசிய தேவைகளான குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, வடிகால் வசதி, குடும்பத்திற்குரிய சொத்துகள், வானொலிப் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி, கார், இருசக்கர வாகனம், கணினி, மடிக்கணினி, குடும்பத்தில் பிரதானமாக உட்கொள்ளும் உணவு வகைகள் சம்பந்தமாக கணக்கெடுப்பு விவரங்கள் சேகரிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சியில், தேர்தல் வட்டாட்சியர் முருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

DBS

ஏல அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள எங்கள் தங்க நகைக் கடன் வாடிக்கையாளர்கள் தங்களுடைய கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறிவிட்டனர் மற்றும் பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பப்பட்ட பல நினைவூட்டல் அறிவிப்புகள், வங்கியில் பதிவு செய்யப்பட்ட அவர்களின் முகவரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

கீழே குறிப்பிட்ட ஏல தேதி அல்லது அதற்கு முன்பாக முழு கடன் தொகையும் செலுத்தப்படாவிட்டால், வாடிக்கையாளர்களின் பிணையங்கள் கீழே குறிப்பிட்ட **ஏல தேதி அன்று காலை 11 மணிக்கு** அல்லது அதற்கு பிறகு வேறு எந்த வசதியான தேதியிலும், மறு அறிவிப்பு இல்லாமல் மற்றும் வங்கியின் முழுமையான விருப்பத்தின் பேரில் வங்கியால் பொது ஏலத்தில், வங்கி வளாகத்தில் அல்லது **https://egold.auctiontiger.net** என்ற பின்-ஏல தளம் மூலம் விற்கப்படும்.

ஏலத் தேதி : 21.07.2026

குறிப்பு#	வாடிக்கையாளர் பெயர்	கிளை பெயர்	மொத்த எடை	நிகர எடை
39537383	சிவா.M	குனியூர்	18.80	18.80

இடம் : சென்னை
நாள் : 12.06.2026

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
DBS வங்கி இந்தியா லிமிடெட்

*DBS வங்கி இந்தியா லிமிடெட், சிங்கப்பூரின் DBS வங்கி லிமிடெட் நிறுவனத்தின் முழு உரிமத்தின் கீழ் இயங்கும் துணை நிறுவனம்

CHANGE OF NAME

I, **GIDEON JAPHETH,** born on **28.12.2006,** (Native District Kanyakumari) Residing at No.7/2, 5th Street, Rajendra Nagar, Palayamkottai, Tirunelveli Dt - 627002, Shall henceforth be known as **GIDEON JAPHETH SAMUELRAJ.**

GIDEON JAPHETH
Tirunelveli.
13.06.2026

CHANGE OF NAME

MOHAMED MYDEEN S/O. ABDUL RAHMAN Born on **20-03-1952** (Native district :Tirunelveli)Residing at Old No :16A,New No :75,Sappani Alim East Street, Melapalayam-627005, Palayamkottai Thaluk,Tamilnadu shall henceforth be known as **MOHAMED MYDEEN S/O. SAPPANI ABDUL RAHMAN.**

By
MOHAMED MYDEEN

CHANGE OF NAME

I, **SULTHAN HASSAN S/o of Thiru. SULTHAN** born on **10th April 1967** (native district: Tenkasi) residing at 121, Main Road, Pambu kovil Santhai, Madathupatti, Kadayanallur Taluk, Tenkasi District, Pin-627862 Tamilnadu, Shall henceforth be known as **ASANAR.**

SULTHAN HASSAN
15th June 2026

ஞாயிறுதோறும் படியுங்கள் தினமணி கதிர்

CHANGE OF NAME

I, **JEREMIAH JAPHETH,** born on **27.07.2004,** (Native District Chennai) Residing at No.7/2, 5th Cross Street, Rajendra Nagar, Palayamkottai, Tirunelveli Dt-627002, Shall henceforth be known as **JEREMIAH JAPHETH SAMUELRAJ.**

JEREMIAH JAPHETH
Tirunelveli
13.06.2026

NOTICE

I, **J JASMIN SHEEBA,** D/o. JOSHVA, residing at No.8/216, Therku theru, KC Puram, Perumalkulam, Tirunelveli-627 502, State of Tamilnadu, India do hereby declare that as per My Aadhar Card (2885 0008 6839), **My Name is J JASMIN SHEEBA, but in my post office RPLI Policy Passbook my name wrongly mentioned as JASMINE J. My Correct name is J JASMIN SHEEBA.** Both the names denotes me only.

-Deponent

NOTICE

I, **S DHARNESH,** S/O. I/C Army No.**15153294F** RANK EX-Nk Name: **Senthil Kumar S,** resident at Door No.12/31-B, Keerivailai House, Marayapuram, Kappukadu-PO, Vilavancode Taluk, Kanniyakumari District, Tamil Nadu - 629 162. As per my Father Record Office my name is **S DHARNESH** and Date of Birth is **09.12.2015** hereby declared that shall hereafter be known as my name as **DHARNESH S**

(DHARNESH S)
NEW NAME

CHANGE OF NAME

I, **ARASU JOSEPH LAZER,** born on: 04.06.1971 (Native District: Kanyakumari) Residing at 45, John Kennedy lane, St. Xavier North street, Kottar, Nagercoil, Agasteeswaram Taluk, Kanyakumari district, Tamilnadu-629002 Shall henceforth be known as **AROCKIAARASU.J**

ARASU JOSEPH LAZER
Nagercoil Date: 15.06.2026

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்களா 6வது பிளாக், கோரமங்களா, பெங்களூர்-560095.

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கிளை அலுவலகம்: வடசேரி தெற்கு, டிஸ்டில்லெரி ரோடு, நாகர்கோயில் பேருந்து நிறுத்தம் எதிரில், வடசேரி, அகஸ்தீஸ்வரம், நாகர்கோயில், தமிழ்நாடு-629001

வ. எண்.	கடன் கணக்கு எண் / கடன்தாரர்/ அடமானதாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை in INR	டேவணித்தொகை (EMD) in INR
1.	1658210180000037 1.Mr.சசிகுமார் 2.Mrs.ராணி சத்தியநேசன்	(I) 08.09.2022 (ii) 06.09.2022 அன்றுள்ளபடி ₹ 27,36,722/- (ரூபாய் இருபத்தேழு லட்சத்து முப்பத்தாறாயிரத்து எழுநூற்று இருபத்திரண்டு மட்டும்) (ii) 12.12.2023 (அடையாளபூர்வ) & 20.11.2024 (நேரடியான)	15.05.2026 அன்றுள்ளபடி ₹ 42,39,367/- (ரூபாய் நாற்பத்திரண்டு லட்சத்து முப்பத்து ஒன்பதாயிரத்து முன்னூற்று அறுபத்தேழு மட்டும்)	₹ 27,66,000/- (ரூபாய் இருபத்தேழு லட்சத்து அறுபத்தாறாயிரம் மட்டும்)	₹ 2,76,600/- (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்து ஆறாயிரத்து அறுநூறு மட்டும்)

சொத்து விவரம் பதுமல் பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்ட **பழைய சர்வே எண்கள்.**2191B, **புதிய சர்வே எண்.**469/13A1, **பட்டா எண்.**5011, **இடைக்காடு கிராமம், விளவங்கோடு தாலுகா, கன்னியாகுமரி மாவட்டம் என்னும் முகவரியில் 6 செண்ட் (242.82 சதுர மீட்டர்), சொத்து, 4.5 அடி வழிப்பாதை உட்பட,** அதனுடன் அனைத்து இதர உபகரணங்கள், அதனுடன் வழிப்பாதை உரிமைகள் மற்றும் அனைத்து உரிமைகள், பொருத்தப்பட்டுள்ளவைகள். எல்லைகள்: கிழக்கு: கனகதாஸ்-க்கு சொந்தமான சொத்து மற்றும் மற்றவர்கள், மேற்கு: மனோன்மணி-க்கு சொந்தமான சொத்து, தெற்கு: விஜயன்-க்கு சொந்தமான சொத்து, வடக்கு: ஜெபசுசான்-க்கு சொந்தமான சொத்து.

கிளை அலுவலகம்: எண்.6,6/1,6/2, SF எண்.5/2A, தரைத்தளம், வண்ணார்பேட்டை ரோடு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி, தமிழ்நாடு-627002

வ. எண்.	கடன் கணக்கு எண் / கடன்தாரர்/ அடமானதாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை in INR	டேவணித்தொகை (EMD) in INR
2.	1649250250000037 1. Mr. விக்னேஷ் மூக்காண்டி 2.Mr. கிருஷ்ணன் M 3. Mrs. செல்வி	(i) 15.03.2025 & 03.03.2025 அன்றுள்ளபடி ₹ 4,99,231/- (ரூபாய் நான்கு லட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து இருநூற்று முப்பத்து ஒன்று மட்டும்) (ii) நேரடியான சுவாதீனம் 11.08.2025	15.05.2026 ₹ 6,25,519.02 (ரூபாய் ஆறு லட்சத்து இருபத்தைந்தாயிரத்து ஐநூற்று பத்தொன்பது மற்றும் பைசா இரண்டு மட்டும்)	₹ 2,49,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரம் மட்டும்)	₹ 24,900/- (ரூபாய் இருபத்து நான்காயிரத்து தொள்ளாயிரம் மட்டும்)

சொத்து விவரம் : ஐட்டம் எண்.1: சேரன்மகாதேவி பதிவு மாவட்டம், சேரன்மகாதேவி ஜாயிண்ட்-II சார்-பதிவாளர் அலுவலகம் மற்றும் **சேரன்மகாதேவி கிராம எல்லைக்குட்பட்ட, பழைய நத்தம் சர்வே எண்.186/1 (பகுதி) மற்றும் புதிய நத்தம் சர்வே எண்.1586/6, 1வது வார்டு, தெற்கு 4வது தெரு** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்: 26 அடி, தெற்கு பக்கம்: 25 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பக்கம்: 34 அடி, மேற்கு பக்கம்: 32.25 அடி ஆக **மொத்தம் 831.25 சதுர அடி அதற்கு சமமாக 77.22 சதுர மீட்டர் காலி நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: மகேஷ் வீடு, தெற்கு: முருகன் வீடு, கிழக்கு: முருகன் நிலம், மேற்கு: ஐட்டம் எண்.II-ல் உள்ள சொத்து மற்றும் கிருஷ்ணன் நிலம்.

ஐட்டம் எண்.2: சேரன்மகாதேவி பதிவு மாவட்டம், சேரன்மகாதேவி ஜாயிண்ட்-II சார்-பதிவாளர் அலுவலகம் மற்றும் **சேரன்மகாதேவி கிராம எல்லைக்குட்பட்ட, பழைய நத்தம் சர்வே எண்.186/1 (பகுதி) மற்றும் புதிய நத்தம் சர்வே எண்.1586/6, 1வது வார்டு, தெற்கு 4வது தெரு** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்: 31 அடி, தெற்கு பக்கம்: 31 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பக்கம்: 6 அடி, மேற்கு பக்கம்: 6 அடி ஆக **மொத்தம் 186 சதுர அடி அதற்கு சமமாக 17.280 சதுர மீட்டர் காலி நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: கிருஷ்ணன் நிலம், தெற்கு: முருகன் வீடு, கிழக்கு: தெற்கு வடக்கு தெரு, மேற்கு: ஐட்டம் எண்.1-ல் உள்ள சொத்து.

மேலே குறிப்பிட்டுள்ள சொத்தானது **Mr.விக்னேஷ் மூக்காண்டி**-க்கு சொந்தமானது (உங்களில் எண்.1-ல் உள்ள நபர்).

இ-ஏல தேதி மற்றும் நேரம் 04.07.2026 - காலை 10.00 மணியிலிருந்து மதியம் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி:	சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்:
03.07.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	**02.07.2026** காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி:
S.No.1: Mr.பரதன் – 93622 76767 / கிருபாகர் ராதாகிருஷ்ணன் – 94455 08743 / R.புஷ்பகாந்த் – 9843114222
வ.எண்.2: Mr.ராம்பிரசாத் - 95009 96689 / Mr.டஜோ சாஜன் - 78451 92961.

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr.பிரபாகரன் Mob.74182 81709**)) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's-7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**

விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கவும்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

ஒப்பம்/-
தேதி: 16.06.2026, இடம்: பெங்களூரு — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி , உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

SASVITHA HOME FINANCE

சாஸ்விதா ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்
சத்குரு காம்ப்ளெக்ஸ், முதல் தளம்,
எண்.640, அண்ணா சாலை, நந்தனம், சென்னை-600035

அசையா சொத்துக்கள் சுவாதீன அறிவிப்பு Rule - 8(1)

பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள். 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002)-ன் கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட சாஸ்விதா ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்-ன் (இனி நிறுவனம் என்றழைக்கப்படும்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டம் 13(2) பிரிவின் விதி 3-ன்படி **24.03.2026 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட கடன் தொகையை அதற்கான வட்டி, இதர செலவுகளுடன் அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று கீழ் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள், சக-கடன்தாரர்களுக்கு மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.**

கடன்தாரர்கள்/சக-கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்தாரர்களுக்கும் / சக-கடன்தாரர்களுக்கும் / ஜாமீன்தாரர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பதென்னவென்றால், மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதியின்படியும் **கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை 12.06.2026 தேதியன்று கீழே கையொப்பமிட்டவர் நிறுவனத்தின் உடமையாக்கியுள்ளார்.**

இது முதற்கொண்டு கடன்தாரர்களோ, சக-கடன்தாரர்களோ, ஜாமீன்தாரர்களோ மற்றும் பொதுமக்களோ இந்த சொத்துக்களில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது **சாஸ்விதா ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட், திருநெல்வேலி கிளை-க்கு வந்து சேரவேண்டிய கீழே கொடுக்கப்பட்டுள்ள கடன் தொகைக்கும், அதற்கான வட்டிக்கும், இதர செலவுகளுக்கும் கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.**

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. (ஈடுபெற்ற சொத்து).

வ.எண்.1: கடன்தாரர் / சக-கடன்தாரர் / ஜாமீன்தாரர்: 1.Mr. சாமி S மற்றும் 2.Mrs.சுமதி S, இருவரது முகவரி: எண்.6/134, முப்படாத்தி அம்மன் கோயில் தெரு, ஊர்மேலழகியான், திருநெல்வேலி-627852; **[Home Loan-Loan A/c Nos. 1062031300110 & 1062011000230] கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: 19.03.2026** அன்றுள்ளபடி **₹9,01,060/-** (ரூபாய் ஒன்பது லட்சத்து ஒன்றாயிரத்து அறுபது மட்டும்) மற்றும் **20.03.2026** முதல் வட்டி, கட்டணங்கள், இதர செலவுகள்.

அசையா சொத்து விவரம்: தென்காசி பதிவு மாவட்டம் மற்றும் இடைகால் சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட பழைய நத்தம் சர்வே எண். 143/1, தற்போது புதிய நத்தம் சர்வே எண்.143/36 001.20 சதுர மீட்டர், **ஊர்மேலழகியான் கிராமம், ஊர்மேலழகியான் பஞ்சாயத்து எல்லை 6வது வார்டு, முப்பிடாத்தியம்மன் கோயில் தெரு, கடையநல்லூர் தாலுகா, தென்காசி மாவட்டம்** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக 33 அடி, வடக்கு தெற்காக 41.5 அடி, **ஆக மொத்தம் 1370 சதுர அடி மற்றும் அதிலுள்ள கட்டிடம் அதன் பழைய கதவு எண்.56K, தற்போது புதிய கதவு எண்.6/134 மற்றும் அதிலுள்ள R.C.C. தளம் போட்ட வீடு,** மின்சார சர்வீஸ் இணைப்பு எண். SC 781 மற்றும் அனைத்து இதர வழக்கமான உரிமைகள். எல்லைகள்: வடக்கு: திருமலையம்மாள் -க்கு சொந்தமான வீடு, கிழக்கு: சண்முகம் மற்றும் மற்றவர்கள் -க்கு சொந்தமான வீடு, தெற்கு: கிழக்கு மேற்கு முப்பிடாத்தியம்மன் கோயில் தெரு, மேற்கு: கோவிந்தம்மாள் -க்கு சொந்தமான வீடு. சொத்தானது விற்பனை பத்திர தேதி 19.04.2005 பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.695/2005-க்கு உட்பட்டது.

வ.எண்.2: கடன்தாரர் / சக-கடன்தாரர் / ஜாமீன்தாரர்: 1.Mr. உதயகுமார் S மற்றும் **2.Mrs.செல்வமணி U,** எண்.25, வடக்கு தெரு, வீரான்குளம், நாங்குனேரி, திருநெல்வேலி-627108; **[Home Loan - Loan A/c Nos. 1062011000222 & 1062012300143] கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: 19.03.2026** அன்றுள்ளபடி **₹ 10,66,972/-** (ரூபாய் பத்து லட்சத்து அறுபத்து ஆறாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து இரண்டு மட்டும்) மற்றும் **20.03.2026** முதல் வட்டி, கட்டணங்கள், இதர செலவுகள்.

அசையா சொத்து விவரம்: திருநெல்வேலி பதிவு மாவட்டம் மற்றும் நாங்குநேரி சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.248/2, புதிய மறு சர்வே எண்.248/30, **தெற்கு நாங்குநேரி கிராமம், தெற்கு நாங்குநேரி 1வது வார்டு, வீராங்குளம், திருநெல்வேலி மாவட்டம் என்னும் முகவரியிலுள்ள 0.01.51 ஹெக்டேர் அதற்கு சமமாக 151 சதுர மீட்டர் அதற்கு சமமாக 3.73 செண்ட் நிலம் மற்றும் அதிலுள்ள கட்டிடம், அதன் கதவு எண்.58/A,** மதிப்பீடு எண்.1170, மின்சார சர்வீஸ் இணைப்பு எண்.07-024-006-1027 மற்றும் வீட்டின் அனைத்து வழக்கமான உரிமைகள். எல்லைகள்: வடக்கு: கிழக்கு மேற்கு தெரு, கிழக்கு: பெருமாள் நாடார் மற்றும் வேல் நாடார் -க்கு சொந்தமான வீடு, தெற்கு: கிழக்கு மேற்கு தெரு, மேற்கு: ஆறுமுக நாடார் மற்றும் இசக்கிமுத்து நாடார் -க்கு சொந்தமான வீடு. சொத்தானது செட்டில்மெண்ட் குடும்ப பத்திர தேதி 21.01.2022 பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.106/2022-க்கு உட்பட்டது.

தேதி: 12.06.2026
இடம்: சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சாஸ்விதா ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்